உ

கணபதி துணை.

முத்தையமான்மியம்.

இஃது
ஸ்ரீவன்றொண்டரவர்கள் மாணாக்கருளொருவராகிய
காரைக்குடி
ராம. சொ. சொக்கலிங்கச்செட்டியார்

அவர்களால் இயற்றப்பெற்று
ஷெயூர்
முத்த. வே. வெள்ளையஞ்செட்டியாரவர்களாலும்,
நா. நா. ராம. நாராயணச்செட்டியாரவர்களாலும்,

கும்பகோணம்
ஸ்ரீசாரதாவிலாஸ அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.
ரௌத்திரி-வூ சித்திரை-மீ
1920.

உ

சிவமயம்.

முத்தைய மான்மியம்.

பொன்னுல காதியா மன்னுல கெலாம்புகழ், இன்னிசைத் தமிழ்மணந் துன்னுபூ மியின்கணே, காண்டகு சீர்த்திப் பாண்டி நன் ணாட்டிலே, மகுடமா தனவை சியர்வாழ் கின்ற, தொண் ணூற் றாறெனுந் தொன்னக ரங்களிற், றண்ணூற் றெழுந்தருட் சைவ நன் னலமீக், கூர்ந்தொளிர் தேவி கோட்டைமா நகர்முன், செய்த வப் பயனெனச் சீர்திசை விளங்க, வந்தவ தரித்த வன்றொண்ட நாம, குருசிகா மணிபாற் கோதறு நூல்கற், றடுத்தமா ணாக்கரு ளதிபரா யுலகெலா, மெடுத்துரைசிறப்புமுற் றியல்பின்வாய்ந் திலங்கினர், முத்தைய நாம முதுதபோ தனரே.

இத்தகைய முத்தையநாம வுத்தமபுருஷர், தேவிகோட்டையிலே மகுடதன வைசியர்மரபிலே, நேமங்கோயில் வகுப்பிலே, நா. பெற்றாட்சி செட்டியார் பெருந்தவப்பயனால் அவர்க்கொரு சற்புத்திரராய் வந்தவதரித்தனர். இவரிடத்து விளங்கிய அரிய சிவச்செயல்களால், இவர் பூர்வத்திலே செயற்கருந்தவமெலாஞ் செய்து முற்றுப்பேறுடையராய்ச் சிறிதுவிட்ட குறையால் அது நிரப்பி வீடு பேறடைதற்கணியராய் வந்தவதரித்தவரென்றே அறிஞர் கூறும் அமைதி வாய்ந்தனர். இவர் பாலியத்திலேயே ஏனைச் சிறார் போலாகாது, சத்துவ வியல்பினராய்ப், "பொதுநீக்கித்தனை நினைய வல்லோர்க்கென்றும் பெருந்துணை" யாயுள்ளான் பரமசிவனேயென்று இறுகப்பற்றிய சிவபத்தியு முடன்வளரவளர்ந்து வருவாராயினர். அப்போது அம்மகுடதன வைசியர் குலத்திலே இலுப்பக்குடி சூடாமணிபுரமுடையார் வகுப்பினராய்த் திருப்பெருந்துறையில் அன்னதான நகர மடாலயத் திருப்பணிமுதலியன செய்துள்ள சிவதர்ம சீலராகிய அண்ணாமலை செட்டியார் பூர்வஞ்செய்த பெருந்தவத்தாலும் நாடோறும் ஸ்ரீமந் மணிவாசக சிவயோகாம்பா ஆத்மநாத சிவசந்நிதிப் பிரார்த்தனா விசேடத்தாலும் அத்திரு

வருளே திருவவதரித்ததென வந்தருளிய ஸ்ரீவன்றொண்ட குருசிகாமணியை யடுத்து வழிபட்டு அக்குருசரண சேவை மேற்கொண்டொழுகுவாராயினார்.

இவர் கண்ணுங்கருத்தும் குருலிங்க சங்கம வழிபாட்டிலேயே முழுதுஞ் செல்லுநிலையராய்ப் பிதுர்வாக்கியமறாவண்ணம் விவாகஞ்செய்தில்லறம் புரிந்து குலகுருமுகமாகச் சிவதீக்ஷைபெற்றுச் சிவநியமானுஷ்டானாதி விசேஷ ஜபதவசிவகைங்கர்யாதி சிவதர்மசீலராய்த்திகழ்ந்துவந்தனர். அக்காலத்திற்றமது குடும்பச்செலவினாலேற்பட்ட கடனோக்கி (கொ. நா.) வுக்கு முத்துப்பேட்டையில் வியாபாரம் செய்தற்காக வேதனம் பேசிக்கொண்டு போயிருந்து அத்தொழில் நடத்திவந்தார். வரினும், இவர் கருத்து குருலிங்கச்சங்கமவழிபாட்டிலேயே உறைத்து நின்றமையால் அம்முத்துப்பேட்டைச் சிவாலயம் அதிதூரத்திலிருந்தும் பிரதிதினமும் நியமமாகத் தெரிசித்துவருவார்.

இத்தொடக்கம் 1868–௵. அப்படித்தெரிசித்து வருங்கால் அச்சிவாலயம் மிகப்பழுதாயிருத்தலும் சவுந்தரநாயகி வடிவழகும் சவுந்தரநாயகர் திருமேனியழகும் அவர் சுக்கிரீவனாதியாற் பூஜிக்கப்பெற்றவரென்பதும் அது ஸ்ரீஞானஸம்பந்தர் திருவு சாத்தானத்தேவாரத்திலும் குறிப்பால் விளங்குவதும் முதலிய மகிமையெல்லாம் தெரிந்து அன்பும் ஆராமையு மீதூர்தலால் அச்சிவாலயத்தைத்திருத்திருப்பணி செய்து விளக்கி நித்தியபூசைமுதலியன செவ்வைசெய்விக்கவேண்டுமென்றநற்கருத்து முதிர்ந்து முறுகி விளைந்தது.

அதனால் அம்முத்தையசீலர் அங்குள்ள வியாபாரிகளையும் கூட்டி அச்சிவாலயமகிமைகள் சிவதர்மவிசேஷம் "கோயில்விளங்கக்குடிவிளங்கும்" என்னும் உலகவசனமுதலிய நன்மைகளையெடுத்துச்சொல்லி அவரவர்வருவாய்க்குத்தக்கவாறு ✠ மகிமைப்பொருள் கொடுத்து வரும்படி எல்லாரையும் உடன்படுத்தி நியமனஞ்செய்து அம்மகிமைப்பொருள் கொண்டும் அப்படியேநாகபட்டினம்வெளிப்பாளையமுதலிய இடங்களிலுஞ்சென்று மகுடதனவைசியர் முதலிய வியாபாரிகளிடமும் வசூலிக்கும் மகிமைப்பொருள்கொண்டும் நெற்களமுதலிய பற்பலவருவாயிடங்களெல்லாஞ் சென்று வசூலிக்கும் அவ்வத்தானியாதியபொருள்கொண்டும் திருப்பணிசெய்ய ஆரம்பித்துத்தலையாற்செங்கற் சுமத்தல் முதலிய

✠ மகிமை யென்பது இக்காலத்து மகமை யென்று வழங்கி வருகின்றது.

காவண்ணம் அவர்க்கு நிதரிசனமாக, நினைத்தகாரியமெல்லாம் பூர்த்திசெய்து, முடிவிற் காசியடைந்து ஒரு காலத்தும் இளைப்புற்றழியாத திருவருட் டிருமேனிச் சிவானந்தப் பெருஞ்செல்வராய்த் திருவடிநீழலில் வீற்றிருந்து வாழ்கின்றனர்.

இவர் முத்துப்பேட்டையிற் சிவாலயத்திருப்பணி செய்தற்குரிய பொருளீட்டுதற்கென்று பற்பல தேசங்களுக்குஞ்செல்லும் போது, ரயில்சார்ஜு கப்பற்கேள்வு முதலிய செலவு தொகையும் ஆகாராதி செலவு தொகையும் தமது சொந்தப்பொருளிலேயே கொடுத்துவந்தனர். இக்காலத்திற் பெரிய பெரிய ஆசாரியப் பட்டம் முதலியன புனைந்துள்ளார் பிறர் பலர், திருப்பணிக்கென்று பொருள்வாங்கி ஆகாராதி வாகனுதிபடைபண்டாராதிகளுக்கும் அத்தொகையிலேயே கொடுத்துச் செலவுசெய்தல் தெரிந்தும் அது அதிபாதக சிவத்துரோகமென் றிகழ்வதன்றி அவ்வழி யொழுகு நினைப்புக் கனவினுந் தோன்றப்பெற்றிலர்.

சிவபத்தர்களுக்கு இன்றியமையாத சிறப்புக் குணங்களெட்டுள்ளனவென்று ஸ்ரீ சேக்கிழார் பெருமான் பத்தராய்ப் பணிவார்புராணத்தில், "ஈசருக்கேயன்பானார்" என்று தொடங்கி "சங்கரனுக்காளான தவங்காட்டித் தாமதனுற், பங்கமறப்பயன்றுய்யார்" என்பது வரை எட்டுத் திருவிருத்தங்களால் வகுத்துக்கூறியவற்றை அவரது ஸ்ரீ பாதஞ் சிரமேற்கொண்டவரும் ஸ்ரீமங்கடராஜப்பெருமானுற் புகழ்ந்து பாடப்பெற்றவருமாகிய ஸ்ரீ உமாபதிசிவாசாரியர் தொகுத்து ஒரு திருவிருத்தமாகப் பாடியருளிய,

"தொண்டரடித் தொழல்பூசைத் தொழின்மகிழ்த லழகார் துளங்கியவர்ச் சனைபுரித றுருதிநியமங்கள், கொண்டபணி திருவடிக்கே கொடுத்த லீசன் குணமருவு மருங்கதையைக் குலவிக் கேட்டு, மண்டிவிழி துளும்பன்மயிர் சிலும்ப லுன்னன் மருவுதிருப் பணிகாட்டி வருப வாங்கி, யுண்டிகொளா தொழிதலென விவையோ ரெட்டு முடையரவர் பத்தரென வுரைத்து ளாரே." என்ற திருப்பாசுரத்தில் விளங்குகின்ற சிவபக்த சிரேஷ்டகுணங்கள் முழுதுந் தம்மிடத்தியல்பானே யமையப்பெற்றவராதலால், "மருவுதிருப் பணிகாட்டி வருப வாங்கி, யுண்டிகொளா தொழிதல்" மற்றை யேழு குணங்களுள்ளும் அதி முக்கியமென்பது தோன்ற ஈற்றில் வைத்து விளக்கிய அத்தகைய உத்தம குணத்தைக்கனவிலேனும் நழுவவிடுவாரா ? விடுவாரல்லர்.

இத்தகைய உத்தம குணமெலாம் வாய்ந்த முத்தையநாம முது தபோநிதியாரது சரித்திரம், தற்கால நிகழ்ச்சியி லமைந்த தாதலால், முதனூலோடமைந்த சரித்திரம் போலாகுமா ? அன்பு மேலீட்டா லுபசரித் துரைத்ததாகுமென்று பாராமுகஞ் செய்யா தொழிக. இவர் எமது ஆசிரியாராகிய ஸ்ரீ வன்றொண்டரவர்களை யடுத்து வழிபட்டொழுகிய காலந்தொடுத்து, முத்துப்பேட்டைத் திருப்பணி தொடங்கி நிறைவேற்றியது முதலிய சரித்திரங்கள் எல்லாம் சிலகால மிவரோடுடனிருந்து தெரிந்தேன். சிலகாலம் இவர் பிறதேசங்களிற் சென்றுவந்து ஆங்காங்கு நிகழ்ந்தனநேரிற் சொல்லத்தெரிந்தேன். இவர் தினந்தோறும் ஸ்நானநுஷ்டானமு டித்தபின் ஜெபமுடிந்தெழுதற்கு ஒரு சாமநேரஞ்செல்வது நியமம். அந்தநேரத்தி லிவர் சிவத்தோடு கலந்து திளைக்குஞ் சிவாநுபவமாகிய பேரின்பக் கலவி பிறரறிவதன்றாகலின் அஃதெழுதிவிளக்குவதன்றென வமைந்தேன். ஒரு முறை திருப்பெருந்துறையில் ஜெபஞ்செய்திருந்த பனிநிழல் மாறிக் கொடிய வெயிலாயபோதும் ஒரு முறை பாம்பு துடையி லேறிச்சென்றபோதும் சிறிதும் அசைவற்றிருந்தபடியால், பிறர் பார்வைக்குப் பூத சரீரியாயினும் உள்ளபடி அன்பே சரீரியாயிருத்தன் முதலிய பல அற்புதங்களுந்தெரிந்தேன். இவர் யாழ்ப்பாணத்துக்கு வந்தபொழுது திருப்பணி யாசகத்துக்கு வேண்டிய சாதகங்கள்செய்து உடன் சென்றுந் தெரிந்தேன். ஆங்குத் திருப்பணிக்கென்று பொருள்கொடுத்த புண்ணியர்களிற் சிலர் இப்பெரியார்க்குப் போஜனஞ் செய்விக்க வென்று என்னிடந் தந்த பொருள்களையும் அத்திருப்பணிக்கணக்கிலேயே சேர்த்து வரவுவைக்கும்படியும் ஆங்காங்குத்தமக்குத்தரும் வெற்றிலைபாக்குமுதலியனவுங்கூட அப்போதப்போதே விற்று அக்கணக்கிலேயே வரவு வைக்கும்படியுஞ்செய்த உறுதிப்பாடுந்தெரிந்தேன். அப்போது அங்கு சிவராஜாங்கத் திருக்கொலுவீற்றிருந்தருளிச்சைவ பரிபாலனஞ்செய்து வந்தருளிய சைவமாதவத்திருவருட் பெருஞ்செல்வ வேந்தராகிய ஸ்ரீமந் நாவலர் பெருமான் இவரது சிவவேடப்பொலிவுகண்டு அகமுகமிகமலர்ந்து இவர் சிவாலயத்திருப்பணிக்குரியரெனத்திருவுளங்கொண்டு திருப்பணிச் செட்டியாரென்று திருவாய் மலர்ந்தருளிப் பின்னரும் அதுவே பெயராக வருந்தோறும் அழைத்தருளும் பெரும்பாக்கியம் பெற்றதுந் தெரிந்தேன். இப்படியே உடனிருந்து தெரிந்தும் இவர் வாய்க்கேட்டுத் தெரிந்தும் இவர் மிலாயி, பர்மா தேசங்களுக்குப் போ

யிருக்குங்கால் கடிதங்களாலும் வந்தவர்கள் சொல்லியவற்றாலுந்
தெரிந்துமுள்ளேன். தெரிந்தவற்றிலும் மறவாதொழிந்தன வேனு
முழுது மெழுதப் புகுந்தாலும் மிக விரியுமாதலின் அதி முக்கிய
மானவை மாத்திரம் ஈண்டெழுதினேன். ஒன்றேனும் உபசரித்
தெழுதினேனல்லேன்.

இத்துணைச் சிறந்த முத்தையநாமத் துத்தமசீலர் முத்
துப்பேட்டைச் சிவாலயத் திருப்பணி நிறைவேற்றி வைக்கக்கூடி
ய எல்லாத் தகுதியுமுடையார் இவர்களே யென்று பூரணமா
நினைத்த நற்கருத்தை மேற்கொண்டு தங்கள் கடையிற் கொடுக்க
ப்பெற்றிருந்த அப்பொருளை நெடுங்காலமாகச் சிவசொத்துக்கஞ்
சாதார் பிறர்போல ஓரணுவும் பழுதுவர விடாமற் பாதுகாத்து
விருத்திசெய்துவந்த ஸ்ரீமான் ராம. அரு. அரு. அருணசலச்செ
ட்டியாரவர்களும், அவர்களது உபயபுத்திர சிகாமணிகளுமாகிய
மூவருள் இளையபுத்திர ரத்தினமாகிய ஸ்ரீமாந் சோமசுந்தரச்செ
ட்டியாரவர்கள் தமது பிதாவும் பிராதாவுமாகிய இருவருஞ் சிவ
லோகஞ்சென்றபின் இத்தனை காலமாயும் மூலபுருஷரது நற்கருத்
து நிறைவேறவில்லையேயென்று பரிந்து முத்துப்பேட்டைச்சிவா
லயப் பெருந்திருப்பணிக்கு அப்பொருள் போதாதென்று தெரிந்
தும், நாமே முழுதுங்கொடுத்து நிறைவேற்றி வைப்போமெனத்
துணிந்து இற்றைக்குச்சில வருடங்கட்கு முன்னாரம்பித்துத் தாங்
கள் மற்றுந்தலங்களிற்செய்துள்ள திருப்பணிகளிலும் அதிவிசேஷ
டமான சிற்பவர்க்கங்கள் திகழப்பெருந்தொகை கொடுத்துத் திரு
ப்பணி நிறைவேற்றி ரௌத்திரி௵ சித்திரை௴ 13௳யில் மகாகு
ம்பாபிஷேகமும் லோகப்பிரசித்தமாகச் செய்துவைத்தார்கள். இத்
தகைய உத்தம சிவகாரியங்களுக்கு மூல புருஷராயிருந்த முத்தை
யநாம முழுத்தவச்செல்வர் ஸ்ரீகாசி க்ஷேத்திரத்திற் சிவபாத நீழ
லிற் சேர்ந்தாரென்பது தெரிந்தவளவிலே அறிவிற் சிறியனாயிருந்
தும் அவரிடத்துள்ள அந்தரங்கக்கலப்பின் வந்த ஆராமையினால்
அவரது மகிமைகள் சிலவற்றைவைத்து இருபத்தைந்து செய்யுட்
கள் அப்போது என்னாற் பாடப்பெற்றன இதன்பின் சேர்க்கப்பெ
ற்றுள்ளன.

ராம. சொ. சொக்கலிங்கச் செட்டி,

காரைக்குடி.

சிவமயம். [வளாங்கூர்

பொன்னாட் டவரும் போந்திறைஞ்சும் பொற்பு நிறை செந்தமிழ்
நன்னாட் டினங்கள் சூழ்மணியா நாப்பணமர்நா யகமணியாந்
தென்னாட் டொளிருந் தேவைநகர் செய்த தவத்தால் வந்துசிவ
மன்னாட் டிதய முத்தைய மணியே மகிநீத் தனையென்னே. (௧)

போத மலர்ந்து பவங்காய்த்துப் புணர்பே ரன்பு பழுத்திழியு
மேத நெறிக ளெனும் வண்ட ரிரியச் சரியை முதனான்கு
சீதமலர்மென் கொடிகள்படர் தெய்வ சைவ கற்பகமே
சாத மொழிவீட் டின்பநெறி தருவாய் முன்னின் வருவாயே (௨)

முத்துப்பேட்டைச்சிவபெருமான்முன்புவலிந்தாட்கொளப்பெற்றாய்
செத்துப் போய்ப்பின் பிறந்துழலுஞ் சீவர் களைத்தே வெனமயங்
பத்திப் பேறிவ் வுலகருறும் பான்மை யொழுகிக் காட்டியநீ [காப்
வித்துப் போலவ் வினைபயனு மேவ வருளா தோவினையே (௩)

நம்பி மொழிந்த திருத்தொண்டத் தொகையி னவிலு நலஞ்சிறந்த
உம்பர் பிரான்மெய் யடியரெலா மோரோர் பணிசெய் துலகளித்தா
ரிம்பர் விளங்க வொருநீசெ யினிய பணிக ளெண்ணிலவே
வம்பை யுழக்குங் கரிக்கோட்டுத் தழும்பர் மருவு மனாலயனே (௪)

இல்வி ருந்துந் துறவுடையை யென்றே சொலவீற்றிருந்தனை நீ
யல்ல லகற்று மானடியார் யாவ ரெனினு மன்புருக
முல்லை முகையோ தனங்கனிபான் முதலா மறுநால் வகையினிய
சொல்லியருத்தி யனையமகே சுரபூ சனைநாடொறும் புரிந்தாய் (௫)

நித்த னமர்தற் குளக்கோயி னெறியா லமைத்துப் பதிட்டைபுரிந்
தொத்த வுணர்வாற் பூசனைசெய் துவக்கு மதுபோ லுலகுவப்ப
முத்தங் கொழிக்குந் திரை முந்நீர் முத்துப்பேட்டைப் பெரும்பதி
பைத்த பணிப்பூட் பரமனார் பயிலும் பழவா லயங்காணா (௬) [யில்

எங்கள் பெருமான் இலமான வில்லி விருப்ப நன்மனையிற்
றங்கிக் களித்து நாமிருத்த றகுமோ வென்னுந் தலையன்பால்
அங்கப் பணிக்காம் பொருளின்மை யறிந்து மாசைபிடித்துந்தச்
செங்கற் றலையாற் சுமத்தன் முதற் றிருத்தொண்டுகள்பற்பலசெய்தும்

அவ்வூர் பலர்பாற் பொருள்கொண்டு மடைதற் கரிய பிறதேசத்
தெவ்வூர் களினுஞ் சென்றீயா வுலோப ரெனினு மெதிர்கொண்டு
தெவ்வூர் பொடித்தா ரடித்தொண்டர் சிறியேந் தருமிப்பொருள்
கொண்டு
மவ்வூர் விடையார் பணிபுரிவீ ரென்றென்றளிக்க வகைகொண்டும்.

எண்ண நிரம்ப நிகேதனமிட் டிகையா லமைத்தெஞ் சியவீந்து
தண்ணென் சாலி விளைநிலமுஞ் சாற்று பிறவுந் தகவாங்கிப்
பண்ணன் மொழியெம் வடிவழகி பாகன் சவுந்த ரேசனுக்காம்
வண்ண மேலும் பெருகுபொருள் வருவாய் பலவு முறவமைத்தாய்.

நீயே யுண்மை யன்புடனிப் பணிகள் புரியு நெறியலதுந்
தாயேயனைய சிவபெருமான்றன்னை யடைந்தார்க்கருள் வகைபோற்
றூயா லயத்தி னகம்படிமைத் தொண்ட ரெவர்க்கு நின்னொழுக்க
மீயா தளித்தாய் நின்பெருமை யெம்மாற் புகலற்கெளிதேயோ (க0)

அத்த னுரைத்த சிவாகமத்தி னறையு முறைக ளவைவழுவா
துய்த்து விளங்க நாற்போது முரிய நிபந்த மோர்ந்தளித்து
நித்த முதலா மூன்றங்க நிகழப் புரிவித் திதன்மேலும்
வைத்து மலர்நந் தனவனமு மலர்கொய் தனைய பணிபுரிந்தாய் (கக)

மேனி நிலத்து முத்தரியஞ் சூழ்ந்தங் கமைத்த மெல்லணையின்
பானன் முடியு முறப்பரமர்ப் பரவிப் பயில்கண் படைநீங்கிச்
சான முறவை கறையெழுந்து தடநீ ராடித் திருவெண்ணீ
றுன பரவப் புனைந்தொருவா வருட்கண் மணிக்கண் டிகைபூண்டு.

உண்மைப்பொருளா யருமறைக்குள்ளுயிராயொளிரு மனுவேந்தாம்
வண்மைப் பஞ்சாக் கரத்தினையோ வம்போலசைவற் றமர்ந்துதின
மண்மைச்சிவாது பவந்திகழு மகத்திற் செபித்து நெடுநேரந், திண்
மைச்சமாதியினின்மணந்து சிவத்தைப்புணருந் திறல்கொண்டாய்.

எம்மைப்பணிகொள்வன்றொண்டப்பெருமானினைத்தாளிருதயத்திற்
பொய்மைப்பவந்தீர்நெறிக்கேது விதுவேயென்றுபொதிந்தவர்தம்
மெய்ம்மைத் திருத்தொண் டுடையவரின் மேலாம் பெருமை தனை
[ப்பூண்டாய்
மும்மைப் புவனங்களும்போற்றுன் முதுசீர்மொழியும் வரம்புடைத்
[தோ (கச)

இனைய பிறவு மொருசேர வொருநீ புரிந்த விதனாலே
யனையவடிய ரெல்லாமோர் வடிவா யவனி யிடைமீட்டும்
வனைபைங் கூந்தல் வாமத்தார் மகிமை விளக்க வந்தனரென்
றனையன் பினரிங் குரைப்பதலா லுரைவே றுளதோ வுரவோனே.

எண்ண நிரம்பப் பணிபுரிந்து மிடையின் றுழுவ லன்புந்த
வண்ண நிறைந்த மணிச்சிலையாற் றளியைப்புதுக்கமனங்கொண்டே
யண்ணல் புகுந்தாய் முன்னாட்செல் லாமலொழிந்த வகலிடங்கள்
கண்ணன்னி திகண்மிகக்கொண்டுகருத்தைமுடிக் குங்கருத்தன்றோ.

கொண்ட விரத முடித்திடுவான் றிரிய வருநின் குளிர்வதனம்
கண்டு மகிழ்வுற் றடிவணங்கிக் கள்ள வினையைக் கட்டறுப்பான்
மண்டு மார்வத் திருந்தேமை வள்ளால் கைவிட் டேகினையால்
அண்டர் பெருமா னடியார்கட் கான செயலோ விஃதையா. (௧௭)

உலக மளிக்கும் பைங்கொடிபாங் கொளிரு முக்கட் கரும்பினரு
ணிலவும் பணிக்குப் பொருணேடி நீசென்றடையா விடநாடி
னுலவு மிரவி கிரணமுறுத் தான முளதே னுளதென்றாற் [ளிதோ.
புலருஞ் சுரமா திகளிலும்போய்ப் பொருள்கூட் டருமை புகல்வெ

எந்நாட்டிருந்தங் குடல்விடினு மேற்றக் குறைவொன் றுனக்கிலைபோ
மந்நாட் டகன்று காசியடைந் தனார் முடிநீ ரணைந்தாடி
மின்னார்வேணிவிசுவேசர் விரைமென்மலர்த்தாள்வீழ்ந்திறைஞ்சிச்
சின்னா ளமர்ந்தவ் வுடலொழித்துச்சிவனா ரடிக்கீழமர்ந்தனையால்.

ஈச னடிக்கீ ழின்பமடுத்திருக்கு முனது புணர்ப்பிதனைப்
பேசின் விரதத் திளைத்துடம்பும் பேணி யளிக்கும் பெருமிடியு
மாசிப் பவர்தம் பெருமையினை யறியார்க் கறிவிப் பஃதன்றிக்
காசி புகுந்தே கதியடைய வேண்டு மென்னுங் கருத்தன்றால் (௨௦)

தொண்டை நாட்டிற் குன்றத்தூர் துலங்கத்தோன்றி யருளியசீர் *
தொண்டர் பரவ வல்லார்முற் றெல்லோர் நூலினியைத் தெமக்குத்
தொண்டர் பெருமை செவிவாயாற் றுய்க்கு மளவே யருளினர் நீ
தொண்டு நேர்கண் டின்புதவி தோயப்புரிதல் சொலுந்தரமோ (21)

* தொண்டர் சீர் பரவவல்லாரென்க.

பத்தி நிதியக் கொள்கலமே பவநோய் பாற்று மௌடதமே
சுத்தி புரிந்த செம்மணியே தூண்டா தொளிரு மணிவிளக்கே
சித்தி பலவுங் குற்றேவல் செய்யக் கடைக்கண் செயுந்தகையே
மித்தையொழியமெய்ஞ்ஞானம்விளக்குமொழுக்கமேற்கொண்டோய்

ஞாலம் புகழன் பருட்கடலே நவையார் பவஞ்ச வாழ்க்கையெனுஞ்
சாலங் கடந்த தவமலையே சகல சீவ தயாநிதியே
ஆலங் குடிகொள் களத்தமுதை யகத்தி னிறைக்கு மன்புருவே
சீலந் திகழுஞ் சைவநெறிக் கொழுந்து படருஞ் செழுந்தருவே(23)

அமரர் புரியும் பெற்றுட்சி வணிகர் புரிந்த வருந்தவமே
திமிர மகத்த தெவ்வுயிர்க்குந் தீர்க்கு ஞானச் செழுஞ்சுடரே
தமர மொருவு சிவாநுபவ சலதி நுகருந் தனிமுகிலே
சமல மடக்கி யமலமரு ணிமலற் புணர்ந்த தவமுதலே. (24)

திண்மை யொழுக்கந்தலைநின்றோய் தேவ ரகத்துந் தெளியாத
வுண்மை நிலையை யுய்த்துணர்ந்தோ யுனையொன் றடியன் வேண்டு
[வனுல்
எண்மைப் பவம் வந் தெவையுறினு மீச னடியி னேசமுறு
மண்மைத் திருத்தொண்டகலாமை யதுவே யருடி யண்ணலே.

முற்றிற்று.
